

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், வாவிபாளையம் கிராமத்தில் ஆழியார் பாசன திட்ட பிஏபி வாய்க்காலில் உடைப்பு ஏற்பட்டதை தொடர்ந்து சரி செய்யும் பணிகளை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன், அமைச்சர், என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே, திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர், இல.பத்மநாபன், நீர்வளத்துறை செயற்பொறியாளர் நரேந்திரன், நகர கழக செயலாளர் நா.ராஜேந்திரகுமார் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மன்னார்குடியிலிருந்து திருச்செந்தூருக்கு புதிய வழித்தடத்திற்கான பேருந்தினை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா கொடியசைத்து தொடங்கி வைத்தார். நகர செயலாளர் வீரா.கணேசன்,ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி சிவா, கே.வி.கே.ஆனந்த், நா.கவியரசு, மன்னார்குடி நகர்மன்ற தலைவர் மன்னை. த. சோழராஜன், போக்குவரத்து கழக மேலாளர் ராஜேந்திரன், போக்குவரத்து கழக மேலாளர் (வணிகம்) சிதம்பரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் பிரதமர் மோடியின் கனவு பலிக்காது!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!



புதுக்கோட்டை. நவ. 18 -

புதுக்கோட்டை மாநகராட்சிக்கு உட்பட்ட டிவிஎஸ் கார்னர் அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு கூட்டுறவுத்துறை புதுக்கோட்டை மாவட்டம் சார்பில் 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா 2025 மாவட்ட ஆட்சியர் அருணா தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், கந்தவக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னதுரை, உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

அப்போது இந்தக் கூட்டுறவு வார விழாவில் கலந்து கொண்ட பள்ளி மாணவர்களுக்கு சிறுசேமிப்பை ஊக்குவிக்கும் வகையில் உண்டியல்கள் வழங்கப்பட்ட நிலையில் தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் ரகுபதி அனைத்து மாணவர்களுக்கும் உண்டியலில் பணம் சேமிக்க விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் முதல் பணத்தை வழங்கினார்.

பின்னர் கூட்டுறவுத்துறை சார்பில் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கிய தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில்:

எஸ்ஐஆர் தேவை என்று முட்டாள்தனமாக கருத்தை சொல்கின்ற கட்சி அதிமுக தான் எடப்பாடி பழனிச்சாமி தான். அவர் எதை வேண்டும் என்றாலும் அறிவிப்பார்.

எஸ்.ஐ.ஆர். பணி மேற்கொள்ள போதிய கால அவகாசம் இல்லை என்பதால் தான் நாங்கள் அதனை எதிர்கின்றோம். தற்போது எஸ்.ஐ.ஆர். தேவையில்லை தேர்தலுக்குப் பிறகு வைத்துக் கொள்ளலாம். அவசர கதியில் எஸ்ஐஆர்.பணி மேற்கொண்டால் எந்த பலனும் கிடைக்காது. அதனால் தான் இப்போது வேண்டாம் என்று தமிழ்நாடு முதலமைச்சர் சொல்லி இருக்கிறாரே தவிர எஸ் ஐ ஆர் தேவை இல்லை என்பது எங்களது நோக்கம் அல்ல. எஸ் ஐ ஆர் முழுமையாக கையாளப்பட வேண்டும். அவசர கதியில் கையாளப்படக்கூடாது. இதில் திமுகவின் பங்கு எதுவும் கிடையாது. பி எல் ஏ 2 அனைத்து கட்சிகளிலும் இருக்கிறார்கள். அவர்களுடன் சென்று அவர்களுக்கு உதவிகளை செய்ய முடியும். ஒரு பிஎல்ஏ 2 50 படிவங்களை ஒரு நாளுக்கு பூர்த்தி செய்து கொடுக்க முடியும் என்ற உரிமையை தேர்தல் ஆணையம் கொடுத்துள்ளது. அதை செய்தால் என்ன தவறு இருக்கிறது.

எஸ்.ஐ.ஆர்.யாருக்கு கொடுக்கப்படும் படிவம் வீடு வீடாக ஒவ்வொரு ஆட்களையும் பார்த்து கொடுத்து வருகின்றனர். திமுகவினர் களிடம் மொத்தமாகவும் ஒரு படிவங்களையும் கொடுக்கவில்லை. அதை நிரூபித்தால் நாங்கள் எதற்கும் தயாராக இருக்கின்றோம்.

களத்தில் தி.மு.க. மட்டும் தான் இருக்கிறது. வேறு யாரும் இல்லை அதனால்தான் எஸ்.ஐ.ஆர். பணிக்கு செல்பவர்களோடு யாரும் செல்வது கிடையாது. நாங்கள் ஏன் களத்தில் இருக்கிறோம் அவர்களுடன் செல்கிறோம் என்றால் வாக்காளர்கள் யாரும் விடுபட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான். இரவு பகலாக உழைத்து வருகி றோம். எஸ்.ஐ.ஆருக்கு கால அவகாசம் போதாது. அவசர கதியில் இப்ப பணியை மேற்கொண்டால் அனைத்தும் குட்டிச்சவராகிவிடும். இப்படி அவசரமாக மேற்கொண்டு நீங்கள் நினைத்த காரியம் எதுவும் நடக்காது. தமிழ்நாடு மக்கள் ஏமாளிகள் அல்ல. இதற்காக இரவு பகலாக உழைப்பவர் தான் திமுக தொண்டன். தமிழ்நாட்டை பொருத்தவரை பீகாரில் நடந்ததை போல் நடக்காது. நாங்கள் எதைப் பற்றியும் கவலைப்படவில்லை எங்கள் கூட்டணி ஸ்ட்ராங்கானது. வலிமையானது. இதை யாராலும் சுக்கு நூறாக உடைப்பதற்கு எந்த சக்தியும் இன்று இந்தியாவில் இல்லை.

பிரதமர் மோடி கனவு கண்டு கொண்டிருக்கிறார் என்பதை 2026ல் நிருபிப்போம். தமிழ்நாட்டில் பிரதமர் மோடியின் கனவு பலிக்காது.

தி.மு.க. யாரையும் மிரட்டவில்லை. பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் பண்ணையார். அவர் வேண்டுமென்றால் யாரையாவது மிரட்டலாம். நாங்கள் யாரையும் மிரட்டவில்லை. பன்னை யாரை மிரட்ட முடியுமா? அவரும் சாந்தமானவர் தான் அவரும் யாரையும் மிரட்ட மாட்டார். திமுகவும் யாரையும் மிரட்ட மாட்டார்கள் என்பதுஅவருக்கு தெரியும். அவர் தலைமைப் பொறுப்பில் இருக்கிறோம் என்ற காரணத்தினால் பேச்சுக்காக சொல்லுகிறார்.

காங்கிரஸ் கட்சி காணாமல் போகும் என்று பிரதமர் மோடி சொல்வதைப் பற்றி எல்லாம் கவலைப்பட வேண்டியதில்லை. எந்த கட்சியும் காணாமல் போவதற்கான வாய்ப்புகள் இந்தியாவில் கிடையாது. ஒரு காலத்தில் அனைத்து கட்சியும் வளர்ந்து விடும்.

புதுக்கோட்டை பிரசித்தி பெற்ற இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான திருவப்பூர் முத்துமாரியம்மன் கோயில் குடமுழுக்கு விழா வருகின்ற ஜனவரி 28ம் தேதி நடத்த தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சரிடம் அனுமதி கேட்கப்பட்டுள்ளது. நிச்சயம் அந்த தேதியில் அனுமதி விரைவில் வழங்குவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது என்று தெரிவித்தார்.

### எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து

# ‘இந்தியா’ கூட்டணி சார்பில் புதுக்கோட்டையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் நடைபெற்றது!

புதுக்கோட்டை, நவ.18 -

தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் நவம்பர் 11 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை புதுக்கோட்டை அண்ணா சிலை பின்புறம் உள்ள டாக்ஸி ஸ்டாண்ட் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், மதச்சார்பற்ற கூட்டணி கட்சி தலைவர்கள், செயலாளர்கள், சங்கர் சிபிஎம், செங்கோடன் சிபிஐ, எஸ்.கே.கலியமூர்த்தி மதிமுக, அறிவொளி திக, வெள்ளை நெஞ்சன் விசிக, அஸ்ரப் அலி முஸ்லிம் லீக், அப்துல் கனி மனித நேய மக்கள் கட்சி, ராஜகோபால் ம.நீ.ம, அப்துல் ஜப்பார் ஆம்ஆத்மி, ரியாஸ் அகமது ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். ஆர்ப்பாட்டத்தில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, உதயம் சண்முகம், கார்த்திக் தொண்டைமான், மாநில, மாவட்ட நிர்வாகிகள்

த.சந்திரசேகரன், சுப.சரவணன், கே.ஆர்.என். போஸ், செ.அசோ க்பாண்டியன், அரு.வீரமணி, அ.சுப்பிரமணியன், க.மதியழகன், ஞான. இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, அடைக்கலம், கீரை. தமிழ் ராஜா, சு.சண்முகம், இரா.ஆனந்த், எஸ்.ஜெயராமன், ஆர்.ஆர்.கே.கலைமணி, எம்.லியாகத் அலி, வே.ராஜேஸ், க.ராஜேந்திரன்,

ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் கே.எஸ். சந்திரன், தென்னலூர் எம். பழனியப்பன், தவ.பாஞ்சாலன், மு.க.ராம கிருஷ்ணன், வெ.முத்துக்கிரு ஷ்ணன், எம்.பரமசிவம், மா. தமிழ் அய்யா, மு.பி.ம. சத்திய சீலன், ஆர்.ஆர்.எஸ். மாரிமுத்து, ஒ.எஸ்.வெங்கடாச்சலம். அ.இளங்குமரன், ஆர்.ஆர்.சாமிநாதன், சி.சண்முகம், கே.பி. அய்யப்பன், கோவிந்தராஜ்,

சக்தி ராமசாமி, வே. பொன்துரை, பொன். கணேசன், பொன்.ராமலிங்கம், கே.பி.கே.டி.தங்கமணி, அரு.வடிவேல், அ. முத்து, அ.அடைக்கலமணி, அழகு சிதம்பரம், இரா. கணேசன வி.ஆர்.இளையராஜா, கே.எஸ்.ரவி, குமார்(எ) துரைக்கண்ணு, பேரூர் கழக செயலாளர்கள் பி. அண்ணாத்துரை, உமுருகேசன், வை. விஜயக்குமார், அ.அழகப்பன், கே.சி.சிவக்குமார், ஆ.பழனிக்குமார், நாசர் (எ) செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் என்.சாத்தையா, இராசு சந்தோஷ், எம்.செந்தில்குமார், ஆர். செல்லத்துரை, த.மணிராஜன், ஆர்.வி.செல்வம், வீரய்யா, கே.எம். சுப்பிரமணியன், கலைவாணி சுப்பிரமணியன், ரா.கருப்பையா, அ.ரெத்தினம்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் எம். வேலுச்சாமி, டாக்டர் செ. குறிஞ்சிவாணன், வி.ஜி. ஆர்.மணிவண்ணன், வி. என்.எம்.பாலு, கவிவேந்தன், டி. எம்.ஆர்.ராமமூர்த்தி, என்.வீரைய்யா, சி.அரங்கநாயகம், எஸ். வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, இரா.மேகநாதன், வளர்மதி, பாத்திமா பீவி, தேவி, சக்திவேல், ஆ.கலை ச்செல்வன், ஹரி விமலாதி, டாக்டர் சுதர்சன், சிவக்குமார், மணிமொழி மனோகரன், ராஜேந்திர சோழன், அஸ்ரப் அலி, ‘வெற்றிச்செல்வன், சிவ.பால இளங்கோ, மு.கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன் முத்துச்சாமி, விளாப்பட்டி சிவா, அன்சாரி பாஷீத், அருண் சேகர், இரா.தமிழ்ராசு, நசுருதீன், கவிக்குமார், முகம்மது ரபீக், இளையராஜா, மேகலா முத்து, மாலா ராஜேந்திர துரை, மகேஸ்வரி சண்முகநாதன், செ. கணேஷ், டாக்டர் கே. என்.அமானுல்லா, ராய. முத்துக்குமார், இராம. செல்வராஜ், பூங்குடி சிவா, வடவாளம் க.செ.மணிமாறன், காதர்கனி, டி.அப்புக்காளை, மா.மணிவேலன், பழனிவேலு, கி. சுப்பிரமணியன், ஆ.மரிய எட்வின், தெய்வானை, ராயல் சபா, பிரசன்னா, அண்ணாத்துரை, முரளிதரன், இதயம் அப்துல்லா, பிரேம் ஆனந்த், டான்சி ராஜேந்திரன், அலுவலகம் செ.ரமேஷ், கனகம்மன் பாபு, டி.செல்வம், கே.எம். கே.ரவிக்குமார், எம்.ஏ.எம். இம்தியாஸ், சுந்தர்ராஜ், தமிழ்ச்செல்வன், ஞானவேல், அற்புத ஹென்றி, ஓவியா மற்றும் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட தலைவர்கள், துணை தலைவர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய அரசுக்கு எதிராகவும் தேர்தல் ஆணையத்திற்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.




முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் இளமைகாலம் தொட்டு நெருங்கி பழகிய நண்பர் மிசா .வெங்கிடங்கால்சந்தானம் 20 ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு வெங்கடங்காலில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன்கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.கோவிந்தராஜன், கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய செயலாளர் க.பழனியப்பன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் இரா.தங்கதுரை மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, ஊத்தங்கரை பேரூர், பாரதிபுரம் 1-வது மற்றும் 2-வது வார்டில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம்(2025-2026) ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி குழந்தைகள் மைய கட்டிடம் மற்றும் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியினை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் கதிரவன், ஒன்றிய செயலாளர்கள் எக்கூர் செல்வம், குமரேசன், ரஜினி செல்வம், பேரூராட்சி தலைவர் அமானுல்லா, பேரூர் கழக பொறுப்பாளர் பார்த்திபன் மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்



கோவை மாவட்டம் அத்திக்கடவு II குடிநீர் திட்டத்தில் கோவை மாநகராட்சிக்கு குடிநீர் வரத்து இருந்த நிலையில், சக்தி சாலை சரவணம்பட்டியில் தண்ணீர் குழாய் உடைந்து சேதம் அடைந்ததை சரி செய்யும் பணியினை அரசு அலுவலர்களுடன் கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ. ரவி பார்வையிட்டார். இதில் சின்ன வேடம்பட்டி பகுதி பொறுப்பாளர் சிரவை சிவா, சரவணம்பட்டி பகுதி பொறுப்பாளர், வடக்கு மண்டலத் தலைவர் கதிர்வேல், பொதுக்குழு உறுப்பினர் கதிர்வேல்சாமி, மாமன்ற உறுப்பினர் பூங்கொடி சோமசுந்தரம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட அம்மம்பாளையம், கல்லாநத்தம், வளையமாதேவி , மஞ்சினி, புங்கவாடி, ஆகிய ஊராட்சிகளில் வாக்காளர் சிறப்பு பட்டியல் தீவிர திருத்த முகாமை நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆய்வு செய்து பார்வையிட்டார். அப்போது ஒன்றிய செயலாளர் டாக்டர் வே.செழியன் , சேகர், கருணாநிதி, சேட்டு, செல்வராஜ், ராஜவேல், சிவாஜி, சந்திரசேகரன், அரசு, நடராஜன், வீராசாமி, வழக்கறிஞர் மணிபாரதி மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் உடனிருந்தனர்.